Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இறவாதீஸ்வரர்: பல்லவர் கால கோயிலும் கலைபணியும்

**மு. சத்தியா**
**முனைவர் பட்ட ஆய்வாளர்**
**தமிழ் இலக்கியத்துறை,**
**சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை -600 005.**
**sathyamurugan0507@gmail.com**

64

**ஆய்வு நோக்கம்**

தென்னிந்தியாவின் கலை வளர்ச்சியில் பல்லவர்கள் மிக முக்கியமானவர்கள். பல்லவர்கள் தொடங்கி வைத்த கலை பணியே சோழர் காலத்தில் உச்சத்தை அடைந்தது. இத்தகைய பல்லவரகளின் கட்டட மற்றும் சிற்ப அழகை விளக்கியுரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

பல்லவர் காலத்தைப் பக்தி இயக்க காலம் என்பர். சைவ, வைணவ சமயங்களில் எழுச்சியே பக்தி இயக்கமாகக் கருதப்படுகிறது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடல்கள் பல பாடி பக்தியை வளர்த்தனர். பல்லவர்கள் கோயில்கள் நிர்மாணித்தும் சிற்பங்கள் வடித்தும் பக்தியை வெளிப்படுத்தினர். மரத்தாலும் செங்கல்லாலும் சுதையாலும் செய்யப்பட்ட கோயில்கள் முதலாம் மகேந்திர பல்லவன் (கி.பி.600-630) காலத்தில் தான் முதன்முதலில் மண்டகப்பட்டில் கல்லைக் குடைந்து குடைவரை கோயிலாக உருவாக்கப்பட்டது. குடைவரை கோயில்களில் தொடங்கிய கோயில் அமைப்பு ஒற்றைக்கல் தளியாக வளர்ச்சியடைந்தன. அத்தகைய கற்றளிகளில் ஒன்றானது இறவாதீஸ்வரர் கோயில். இக்கோயிலின் பல்லவர்கால கட்டட கலையையும் சிற்பத்தொகுதியின் சிறப்பையும் இக்கட்டுரை விளக்குகிறது. நாகர பாணியில் அமைந்த கட்டடமும் சிவத்திருமேனிகளால் சூழப்பட்ட திருச்சுற்று சுவரும் பல்லவர் காலம் ‘கலைகளின் காலம்’ என்பதை எடுத்துக் கூறுகிறது.

**திறவுச் சொற்கள்**

திருமேனி, முத்திரை, புராணம்,

**முன்னுரை**

இறவாதீஸ்வரர் என்னும் கோயில் காஞ்சிப்புரத்தில் உள்ள சிவன் கோவில்களில் ஒன்று. இக்கோவில் பெரிய காஞ்சிப்புரத்தில் கம்மாளர் தெருவில் (ஜவஹர்லால் தெரு) அமைந்துள்ளது. இதற்கு ஸ்ரீ ம்ருத்திஞ்ஜயேஸ்வரர், இறவாஸ்தானம் என்ற வேறு பெயர்களும் உண்டு. இக்கோவிலில் உள்ள இறைவன் இறவாதானீஸ்வரர், இறவாஸ்தானத்து இறைவர் என்று அழைக்கப்படுகிறார்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

காஞ்சிபுராணத்தில் சொல்லப்பட்ட நூற்றியெட்டு சிவன் கோவில்களில் இதும் ஒன்று. இறவாத்தானப்படலம் என்று இக்கோவிலின் சிறப்புகள் காஞ்சிப்புரணத்தில் இடம்பெற்றுள்ளது. 'புள்ளிவண்டு பெடையொடு ஆடிப் பொங்கரிற்' என்று இப்படலம் தொடங்குகிறது. இக்கோயில் ஏறத்தாழ 1300 ஆண்டுகள் பழமையானது. பல்லவர் கால கட்டட அமைப்பையும் சிற்பக்கலையையும் தன்னுள் கொண்டுள்ளது. இக்கோயிலின் கட்டட அமைப்பையும் சிற்பத்தொகுதியையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கோயில் வரலாறு**

கி.பி. எட்டாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மனால் (கி.பி.690-725) இக்கோயில் கட்டப்பட்டது. இரண்டாம் நரசிம்மனுக்கு இராசசிம்மன் என்ற மற்றொரு பெயரும் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோயில், காஞ்சி கைலாசநாதர் கோயில், பனைமலை தாளகிரீசுவரர் கோயிலையும் கட்டியவன் இவனே. இராசசிம்மனுக்கே உரிய பாணியில் இக்கோயில் அமைந்துள்ளது. 'இராசசிம்மன் கட்டிய கோவில்கள் தொலைவில் இருந்து நோக்கின், தருமராசர் தேரைப்போலவே தோன்றும்; வரவரச் சிறுத்து உயரும் தட்டுகளைக் கொண்டவை. உள் அறை வேறு, கோபுரம் வேறு என்று இராது. நான்கு பக்கங்களிலும் உள்ள புரைகளில் சிவலிங்கம் இருக்கும். கோவிலுக்குள் எழுந்தருளுவித்த லிங்கங்கள் எட்டு அல்லது பதினாறு பட்டைகள் தீர்ந்தவை; சில பக்கங்களில் காடி வெட்டியவை. சிவலிங்கத்திற்குப் பின் சுவர்மீது சோமாஸ்கந்தர் சிலை இருக்கும். திருவாசிகள் ஒற்றை வளைவு கொண்டவை. இவை அனைத்தையும் விடச் சிறந்த அடையாளம் ஒன்றுண்டு. அஃதாவது, தூண்களுக்கு அடியில் பின் கால்கள்மீது எழுந்து நிற்கும் சிங்கங்கள் வெட்டப்பட்டு இருப்பதே ஆகும். சில சிங்கங்கள் சுண்ணாம்பினால் அமைக்கப்பட்டிருக்கும்' (பல்லவர் வரலாறு. ப.155) என்று மா. இராசமாணிக்கனார் இராசசிம்மன் கால கோயில்களுக்கு தனியே இலக்கணம் வகுத்துள்ளார்.


**கோயில் புராணம்**

இக்கோயிலின் புராணக் கதையோடு மார்கண்டேயன் கதையும் இணைத்துக் கூறப்படுகிறது. மிருகண்டு முனிவருக்கு பிறந்த மார்க்கண்டேயன் என்னும் பதினாறு வயது சிறுவன் சிவனை வணங்கி சாகா வரம் பெற்று 'என்றும் பதினாறு' ஆனான். மார்க்கண்டேயன் வழிபட்ட தலமாக இக்கோயில் கருதப்படுகிறது. யமனிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இக்கோயிலின் இறைவனைச் சரணடைந்து மார்க்கண்டேயன் சாகா வரம் பெற்றதாகக் கூறப்படுகிறது. மேலும், சுவேதன், சாலங்காயன முனிவரின் பேரன் இத்தலத்தை வழிபட்டு மரணத்தை வென்றதாக இக்கோயில் புராணம் கூறுகிறது.

**கட்டடக்கலை**








இக்கோவில் மணல்கல்லால் ஆனது. பிற கற்களைவிட மணல்கல்லில் சிற்பம் எளிமையாக வடிக்க முடியும் என்பதால் பல்லவர்கள் இதனைப் பயன்படுத்தினர். சுட்ட செங்கல்லால் ஆன உபபீடம் மீது அதிட்டானம் அமைந்துள்ளது. அதிட்டனாம் உபானம், ஜகதி, முப்பட்டை குமுத வரி, கண்டம், பட்டிகை, கம்பு கொண்டு பாதபந்த அதிட்டானத்தில் அமைந்துள்ளது. கண்டத்தில் கதை கூறும் சிற்பங்கள் ஏதும் இன்றி காணப்படுகிறது. அதன் மீது பாத சுவர் (பித்தி) எழுப்பப்பட்டுள்ளது. பாத சுவரில் அரை தூண்கள் கொண்டு தேவ கோட்டங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தேவ கோட்டங்களிலும் சிவனின் உருவம் வடிக்கப்பட்டுள்ளது. சுவரின் மூலைகளில் யாளிகள் பாயும் நிலையில் உள்ளன. சிவ உருவங்களின் மேல் தோரணங்கள் பஞ்சரங்கள் போல் அமைந்துள்ளன. இதனைக் கோட்ட பஞ்சரம் என்பர். பிரஸ்தரத்தில் யாளி வரி ஏதும் இல்லை. கபோதத்தில் கர்ணக்கூடு அமைக்கபெற்று அதில் விநாயகர் உருவம் இடம் பெற்றுள்ளது. இக்கோயில் மூன்று தளங்கள் கொண்டுள்ளது. கழுத்துப் பகுதியில் (கிரீவம்) சாலை அமைக்கப்பட்டு பூதங்கள் வடிக்கப்பட்டுள்ளது. நாகர விமானத்தில் கலசமின்றி காணப்படுகிறது. கருவறையோடு இணைந்த முன்மண்டபம் உள்ளது. இதன் மகா மண்டபம் பிற்காலத்தையது. கோயிலின் முன்பு நந்தியும் பலிபீடமும் உள்ளது. இக்கோயிலில் கல்வெட்டுகள் ஏதும் இல்லை.





**ஆலடியான்**

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கோயிலின் தெற்கு பக்கச்சுவரில் அரைத்தூண்களால் பிரிக்கப்பட்டுள்ள தேவ கோட்டங்கள் ஐந்து உள்ளன. இவற்றில் இருபக்கமும் பல்லவர் கலைபாணிக்கே உரிய துவாரபாலகர் கையில் தண்டத்துடன் உள்ள சிற்பம் அமைந்துள்ளது. அவற்றிற்கு இடையே அமர்ந்த நிலையில் அழகிய

**தட்சிணாமூர்த்தி**

சிற்பம் அமைந்துள்ளது. ஞானத்தைத் தட்சிணமாக வழங்கும் தட்சிணாமூர்த்தியின் இருபக்கமும் வணங்கிய நிலையில் முனிவர்கள் அமர்ந்துள்ளனர். பொதுவாகத் தட்சிணாமூர்த்தியின் திசையாகத் தென்திசைக் கருதப்படுகிறது. இங்கு ஆலமரத்தடியில் தென்திசையை நோக்கியவாறு வீராசனத்தில் யோகக்கட்டோடு அமர்ந்துள்ளார். முன் வலதுகை மான்களுக்கு புல் கொடுத்துப்பது போல் உள்ளது. இச்சிற்பத்தில் தட்சிணாமூர்த்தியின் முகம் சிதைந்து காணப்படுகிறது. தட்சிணாமூர்த்தியைச் சுற்றி சிவகணங்கள் காட்டப்பட்டுள்ளது. முனிவர்களின் தலைக்கோலங்கள் வேறுவேறாக உள்ளன. முனிவர்களுக்கு மேல் சிம்மங்கள் அமர்ந்துள்ளது.

**ஆடவல்லான்**



**பிச்சாடனார்**

சிவன் எடுத்த

என்றும்

பிச்சைத்


மேற்குப் பக்க சுவரில் இரு துவாரபாலகர்களுக்கு இடையில் உள்ள சிற்பத்தொகுதியில் முதலாவதாகப் அமைந்துள்ளார். தாருகா வன முனிவர்களின் ஆணவத்தை அழிப்பதற்காக உருவம் இதுவாகும். பலிதேர் பிரான் ஐயங்கொள் பெம்மான் என்றும் அழைக்கப்படும் இத்திருகோலம் சிவனின் பிச்சையேற்கும் வடிவமாகும். இவ்வடிவத்தை மாணிக்கவாசகர் 'ஆரூர் எம் தேவா' என்று பாடுகிறார் (திருவாசகம். பா.எண்.81). இடது கரத்தில் மானிற்கு புல் கொடுத்துக் கொண்டு இயல்பாக நின்ற கோலத்தில் காட்சி தருகிறார். இவரை பார்த்த வண்ணம் முனிவரும் முனிப் பத்தினியும் காணப்படுகின்றனர்.


பிச்சாடனாரைத் தொடர்ந்து **சிவனின் ஆடல் உருவம்** காணப்படுகிறது. நூற்றியெட்டு சிவதாண்டவங்களில் நாற்பத்தேழாவது தாண்டவமான விருச்சிக கர்ணத்தை ஆடும் நிலையில் உள்ள சிவன் காட்சி தருகிறார். இடது கால் பின்னோக்கி வலைந்திருக்க, முன் வலதுகை இடது பாதத்தைப் பிடித்தவாறு இத்தாண்டவம் அமைந்திருக்கிறது. முன் வலதுகை வான்னோக்கி உயர்ந்திருக்கிறது. பிற ஆறு கைகளிலும் ஆயுதம் தாங்கிய நிலையில் உள்ளது.

அடுத்து, **கஜசம்ஹாரமூர்த்தி** காட்சி தருகிறார். யானை உருவம் கொண்ட கஜாசுரன் என்னும் அரக்கனை அழித்ததால் 'கஜாசுர சம்ஹாரர்' என்றும் 'கஜயுத்த மூர்த்தி' என்றும் அழைக்கப்படுகிறார்.

மேலும், இவரை யானை உரித்த பெருமான் என்றும் அழைப்பர். வலது கால் யானையின் தலையை மிதித்தவாறு உள்ளது. யானையின் உடலை கிழித்து தன் தோளில் அணிந்துக் கொள்ளவது போல் இவ்வுருவம் அமைந்நதிருக்கும். ஆறு கைகளுடன் இத்தோற்றம் அமைந்துள்ளது. ஒரு கையில் பாசத்துடனும் மற்ற கையில் அசுரனின் தோலைக் கிழித்தவாறும் உள்ளது. சிவனின் உக்கிரத்தைப் பார்த்தவாறு உமை அருகில் நின்று கொண்டுள்ளார். இவ்வடிவம் கைலாசநாதர் கோயில், முக்தீஸ்வரர் கோயில், மதங்கீஸ்வரர் கோயிலிலும் உள்ளது. சோழர்கள் இவ்வுருவத்தைப் பெரிது பயன்படுத்தினர். மேலும், தேவ கோட்டங்களிலும் விமான கோட்டங்களிலும் கஜசம்ஹார மூர்த்தியைக் காணலாம்.

**காலனை வென்ற இறைவன்**






வடக்குப்புற சுவரில் கங்காதர மூர்த்தி, ஜலந்தரவத மூர்த்தி, கால சம்ஹார மூர்த்தியும் இடம் பெற்றுள்ளார். சிவத்திருமேனிகளில் ஒன்றான கங்காதர மூர்த்தியைக் **கங்காதரர்** என்றும் அழைப்பர். கங்கையின் வெள்ளத்தையும் அதன் வேகத்தையும் குறைக்க சிவன் கங்கையைத் தன் சடா முடியில் தாங்கிய வடிவமே கங்காதர மூர்த்தியாகும். முன் வலதுகை 'சிம்மகர்ண முத்திரை'யிலும் பின் வலதுகை தொடையைத் தொட்டவாறு 'ஊறு முத்திரையி'லும் பின் இடதுகை மகிழ்ச்சியைத் தெரிவிக்கும் 'அலபத்ம முத்திரை'யிலும் அமைந்துள்ளன. முன் இடதுகையானது நீண்டு வணங்கி நிற்கும் கங்கையைத் தாங்கியுள்ளது. சிவபெருமானிற்கு அருகில் உமை நின்று சிவனை மிரட்ச்சியோடுப் பார்த்துக் கொண்டுள்ளார்.

அடுத்து, சிவனால் உருவான ஜலந்தரன் என்னும் அசுரனைச் சிவனே அழிக்க எடுத்த உருவம் **ஜலந்தரவத மூர்த்தி** ஆகும். சிவ மூர்த்தங்களில் மிக அரிதாக காணப்படும் உருவம் இதுவாகும். படத்தில் கீழே உள்ள பெரிய உருவம் ஜலந்தரன். அவனை அழிப்பது தெளிவாக இல்லை. சிவன் ஸ்வதிகாசனத்தில் அமர்ந்துள்ளார். அவரைச் சுற்றி யோகப்பட்டம் கட்டப்பட்டுள்ளது. பின் இருகையிலும் அக்க மாலையும் கமண்டலமும் காணப்படுகின்றன. முன் இருகையும் சேதமடைந்துள்ளது.

வடக்குப்புற சிற்பத்தொகுப்பில் இறுதியாக அமைந்துள்ளது **காலசம்ஹார மூர்த்தி** ஆகும். மேலும் காலாரிமூர்த்தி என்றும் இவ்விறைவனை அழைப்பர். 'என்றும் பதினாறு' என்று சாகாவரம் பெற்ற மார்கண்டேயனின் புராணத்தைக் கூறும் வடிவம் இது. மார்கண்டேயனைக் காக்க சிவன்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

எடுத்த உருவமாக இந்த காலசம்ஹார மூர்த்தி கருதப்படுகிறார். பல்லவர், சோழர் இருவருமே இவ்வடிவத்தைக் கோட்டங்களில் அமைத்தனர். காஞ்சிபுரத்தில் கைலாசநாதர், பிறவாதீஸ்வரர், முக்தீஸ்வரர் கோயில்களில் இவ்வடிவம் உள்ளது. இங்கு சிவனிற்கு நான்கு கைகள் காட்டப்பட்டுள்ளது. முன் இடதுகையில் சூலம் தாங்கியுள்ளார். பிற கைகள் சேதமடைந்துள்ளதால் முத்திரைகள் என்னவென்பது புலப்படவில்லை. மேல் வலது மூலையில் மார்க்கண்டேயன் லிங்கத்தைக் கட்டிப் பிடிப்பது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.







கருவறை சற்று நீண்டுள்ளதால் இரு பக்க சுவரிலும் கோட்டங்கள் அமைந்துள்ளது. தெற்குபக்க சுவரின் கோட்டதில் **மகிஷாசுரமர்தினி** தன் சிம்ம வாகனத்தோடு காட்சி தருகிறார். அருகில் மான், தேவியர் உள்ளனர். வடக்குபுற சுவரில் விநாயகர் தன் பூத கணங்களோடு உள்ளார். இக்கோயிலில் பல்லவர் பாணியில் அமைந்த துவாரபாலகர்கள் கையில் தண்டத்தோடு காணப்படுகின்றனர். மா. இராசமாணிக்கனார் கூறியதைப் போல் யாளிகள் பாயும் நிலையில் உள்ளன. கருவறையில் சிவ லிங்கத்திற்கு பின்புறம் பல்லவர்க்கே உரிய **சோமாஸ்கந்தர்** புடைப்பு சிற்பமாக உள்ளது.

**முடிவுரை**

இறவாதீஸ்வரர் என்னும் இத்திருக்கோயில் பல்லவர் கால கலையைத் தன்னுள் கொண்டுள்ளது. கட்டடகலையைப் பொருத்தவரை கற்றளியின் வளர்ச்சி நிலை வெளிப்படுகிறது. பல்லவர் கால சிற்பங்கள் அனைத்தும் இயங்கு சிற்பங்கள் ஆகும். கால்கள் நடனமாடிய படியும் கைகள் ஓங்கிய நிலையிலும் இயங்கு சிற்கங்களாகவே அமைந்திருக்கும். இக்கோயிலின் சிற்பங்களும் அவ்வாறே அமைந்துள்ளதால் புராணக் கதை எளிதாக வெளிப்பட்டு புரியும்படி உள்ளது. இக்கோயில் உருவத்திருமேனிகளைப் பொருத்தவரை பல்லவர்கள் சிவபெருமானுக்கு கொடுத்த முக்கியத்துவமும் வெளிப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. இராசமாணிக்கனார்.மா., **பல்லவர் வரலாறு,** சைவ சிந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2000.
2. இராசவேலு.சு., கவன முருகன்.சு., சிலையும் கலையும், தொல்லியல் கழகம், தஞ்சாவூர், 2017.
3. இராசேந்திரன்.பொ., சாந்தலிங்கம்.சொ., கோயிற் கலை, நியூ சென்சுவரி புக் ஹவுஸ், சென்னை, 2014.
4. கணபதி ஸ்தபதி.வை., **சிற்பச் செந்நூல்**, அரசு மைய்ய அச்சகம், சென்னை, 2001.
5. நாகசாமி.இரா., சந்திரமூர்த்தி.மா., தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு, சென்னை, 2014.

**இணையளங்கள்**

1. https://ta.m.wikipedia.org
2. https://www.tamilvu.org